## எமது ஒருங்கிணைந்த பேண்தகுதன்மை கொள்கை

*கூட்டுறவு பேண்தகுதன்மைக்கான எமது அர்ப்பணிப்பானது அனைத்து செயற்பாடுகளிலிருந்தும் நிகர நேர்மறை விளைவுகளுடன் எங்கள் வர்த்தகத்தின் நீண்ட கால வாழ்திறன், இலாபம், ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைசார் நடத்தை ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு உயிர்ப்பான மூலோபாயத்தை உள்ளடக்கியதாகும். பல நாடுகளில் வணிக முயற்சிகளை மேற்கொள்ளும் ஒரு பன்முகக் குழுமம் என்ற வகையில், தனித்தன்மைவாய்ந்த கூட்டுறவு பொறுப்பின் பாரம்பரியத்தை நிலைநிறுத்துவதற்கான எங்கள் தீர்மானத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இந்த உறுதிப்பாடு சர்வதேச தரநிலைகள் மற்றும் பேண்தகு அபிவிருத்திக்கான முன்முயற்சிகளுடனான எங்கள் செயற்பாடுகளை சீரமைப்பதுடன், முன்னெச்சரிக்கை கொள்கையை கடைபிடிப்பது, எதிர்மறை தாக்கங்களை குறைப்பது, பெறுமதியை அதிகரிப்பது மற்றும் பேண்தகு வளர்ச்சியை மேம்படுத்துவது ஆகியவற்றில் கவனம் செலுத்துவது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.*

***எமது கொள்கை அர்ப்பணிப்புகள்:***

*A. சட்டம்சார்ந்த மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறுவி பேணுதல்.*

*B. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள உதவுதல் மற்றும் ஐ.நா உலகளாவிய ஒப்பந்தத்தின் பத்துக் கொள்கைகள், பெண்கள் வலுவூட்டல் கோட்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஏனைய தன்னார்வ ஒப்புதல்களை ஏற்றுக்கொள்வதை வலுப்படுத்துதல்.*

*C. நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் வர்த்தகத்தை மேற்கொள்ளுதல் மற்றும் ஊழல், இலஞ்சம், மோசடி மற்றும் நெறிமுறைகளுக்கு புறம்பான நடத்தைக்கு எதிராக சிறிதும் சகித்துக்கொள்ளாத கொள்கையை நிலைநிறுத்துதல்.*

*D. சூழல் பாதிப்புகளைக் கண்டறிவதற்கான முன்னெச்சரிக்கை கொள்கையை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் சாத்தியமான பாதகமான சூழல் தாக்கங்களைத் தணிக்கும் சூழல் முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்துதல்.*

*E. செயற்பாடுகளில் தாங்குதிறனை உறுதிசெய்யவும் பங்குதாரர்களைப் பாதுகாக்கவும் காலநிலை மாற்ற அபாயங்கள் மற்றும் ஏனைய சாத்தியமான இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளை எதிர்கொள்ள அனர்த்த இடர் குறைப்பு (DRR) மற்றும் வர்த்தக தொடர்ச்சி முகாமைத்துவ (BCM) மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல்.*

*F. பங்குதாரர்களிடமிருந்து பின்னூட்டங்களை பெறுவதற்கும், முன்னேற்றத்திற்கான தேவைகள் மற்றும் பகுதிகளை அடையாளம் காண்பதற்கும், பேண்தகு அபிவிருத்திக்கான எங்கள் மூலோபாய தலையீடுகளை வலுப்படுத்துவதற்கும் பொறிமுறைகளை நிறுவுதல்.*

*G. பொறுப்புக்கூறும்தன்மையுடன் நெறிமுறைசார்ந்து வர்த்தகத்தை நடத்துவதற்கு விநியோகச் சங்கிலிகளுக்குள் உள்ள எங்கள் பங்குதாரர்களை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல்.*

*H. மூலோபாய முடிவெடுக்கும் செயன்முறைகளில் சமூக மற்றும் சூழல்சார்ந்த நிர்வாக தராதரங்கள் மற்றும் பொறுப்பான முதலீட்டு வழிகாட்டுதல்களை ஒருங்கிணைத்தல்.*

*J. செயன்முறை மேம்படுத்தல் மற்றும் முன்நோக்கான இடர் முகாமைத்துவம் மூலம் செயற்பாடுகளின் வினைத்திறன், செயற்திறன் மற்றும் தாங்குதிறனை மேம்படுத்துதல்.*

*K. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் செயன்முறைகள் மற்றும் தயாரிப்புகள்/சேவைகளில் தொடர்ச்சியான புத்தாக்கங்களின் பண்பை ஊக்குவித்தல்.*

*L. தர முகாமைத்துவம், தரச்சின்ன ஒருமைப்பாடு மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தின் தொடர்ச்சியான முன்னேற்றம் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதை உறுதி செய்தல்.*

*M. கூட்டாண்மை, உள்ளூர் வேலைவாய்ப்பு, உள்ளூர் கொள்முதல் மற்றும் ஏனைய மூலோபாய தலையீடுகள் மூலம் உள்ளூர் சமூகங்களுக்கு பேண்தகு பெறுமதி உருவாக்கத்தை முன்னெடுத்துச் செல்லுதல்.*

*N.* அனைத்து பங்குதாரர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலை உறுதிசெய்ய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்தல்.

*O.* விரிவான திறமை ஈர்ப்பு/ தக்கவைத்தல், திறன் விருத்தி மற்றும் முற்போக்கான தொழில் மாற்ற மூலோபாயங்கள் மூலம் பன்மைத்துவ மற்றும் உள்ளடக்கிய ஒரு தொழிற்படையை பேணுதல்.

*P.* சர்வதேச ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகளின் பாதுகாப்பை ஆதரித்து ஊக்குவித்தல் மற்றும் அனைத்து வகையான பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல்கள் இல்லாத பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய பணிச் சூழலை அனைத்து பங்குதாரர்களுக்கும் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய ஐ.நா வழிகாட்டுதல் கோட்பாடுகளுக்கு ஏற்ப வழங்குதல்.

*Q.* நிறுவனத்தைப் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களை பங்குதாரர்கள் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்காக, உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சி உட்பட, அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அளவுகோல்களுக்கு ஏற்ப, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையோடு செயலாற்றுகை தகவலை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

*R.* தொடர்புடைய அபாயங்கள் குறித்த அக்கறையுடனும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையிலும் இருப்பதன் மூலமும் மேலும் தொடர்புடைய விதிமுறைகள், வழிகாட்டுதல்கள், கொள்கை சட்டகங்கள் மற்றும் தொழிற்துறை தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதன் மூலமும் எங்கள் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் நிறுவனத்தின் முக்கியமான தகவல்களைப் பாதுகாத்தல்.

*S.* சிறப்பான, நெறிமுறைசார்ந்த நடத்தை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் தரநிலையாக பொறுப்பான நிறுவனத் தொடர்பாடலை உறுதி செய்வதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை நிறுவுதல்.

*T.* அனைத்து செயற்பாடுகளிலும் மனிதாபிமான மற்றும் நெறிமுறைசார்ந்த நடைமுறைகளை நிலைநிறுத்தி, உயிர் பல்வகைமை, வனசீவராசிகள் மற்றும் உணர்திறன் சூழல் முறைமைகள் தொடர்பான ஒரு 'நிகர நேர்மறை தாக்கத்தை' உறுதி செய்தல்,.

*U.* வழக்கமான செயலாற்றுகை மதிப்பாய்வுகளை மேற்கொண்டு, இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அர்ப்பணிப்புகளுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டங்களின் விளைவுகளிலிருந்து பெறப்பட்ட முக்கியமான நுண்ணோக்குகளை செயற்பாட்டு மூலோபாயங்களில் உட்பொதித்தல்.

**நடைமுறைப்படுத்தல்**

*Aitken Spence PLC* இன் பணிப்பாளர் சபை, குழும மேற்பார்வை சபை, குழுவின் பேண்தகு பேரவை மற்றும் முகாமைத்துவ சபை ஆகியன, பேண்தகுதன்மைக்கான எங்கள் உறுதிப்பாடுகள் குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் திசைவழிகளை அமைப்பதுடன், குழும நிறுவனங்களின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்யும்.

ஒவ்வொரு வர்த்தகப் பிரிவினரும் தேவையான சட்டகங்கள், நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் சமூக, சூழல் மற்றும் பொருளாதார நிர்வாக முன்னுரிமைகளைப் பூர்த்தி செய்யும் நடைமுறைகள் மூலம் நிறுவனத்தின் செயற்பாட்டு பாதிப்புகள், அபாயங்கள், இணக்கத் தேவைகள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தல் செயற்பாட்டில் தலைமைவகிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரிவு பேண்தகுதன்மை குழுக்களின் முக்கிய பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுமத்தின் பேண்தகுதன்மை குழு, அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளைப் பற்றி கலந்துரையாடவும், இந்த ஒருங்கிணைந்த கொள்கையின் செயலாக்க கட்டமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கொள்கை உறுதிப்பாடுகளுக்கு தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்தவும் பொறுப்பானதாகும்.

- இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் எமது அனைத்து நிறுவனங்களுக்கும் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகள் கட்டாயமாக்கப்படுவதுடன், அவை அத்தியாவசியமான அல்லது 'செய்ய வேண்டியவை' என்று பட்டியலிடப்பட்டுள்ளன.
- பாதிப்புகள், அபாயங்கள், இணக்கத் தேவைகள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளின் தன்மை மற்றும் அளவுக்கேற்ப, எமது வர்த்தகப் பிரிவுகளுக்கு மிகவும் விரிவான, ஆழமான நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது அல்லது ''செய்ய வேண்டும்'' என பரிந்துரைக்கப்படுகிறது.

- மேலும், இந்த கட்டமைப்பு எமது நிறுவனங்களுக்கு அந்தந்த தொழிற்துறைகளுக்குப் பொருத்தமான காரணங்களை வெற்றிபெறச் செய்வதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது (முன்மாதிரியான அல்லது 'செய்யக்கூடிய' தெரிவு நடவடிக்கை).

விபரிக்கப்பட்டுள்ளவாறு இந்த கொள்கையை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதற்கு குழுமமானது தேவையான விழிப்புணர்வு, கல்வி மற்றும் திறன் விருத்தி தலையீடுகளுக்கு வசதியளிக்கும்.

| ***ஆவண கட்டுப்பாடு*** | | |
|---|---|---|
| | திகதி | திருத்தம் |
| திருத்தம் பற்றிய விபரங்கள்: | *31.03.2024* | - எமது நோக்கங்களின் துல்லியமான பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து கொள்கை உறுதிப்பாடுகளும் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளன.<br>- உள்ளூர் சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கொள்கை கூற்றுக்கள் அதிக ஒத்திசைவு மற்றும் சீரமைப்பிற்காக இணைக்கப்பட்டுள்ளன (முன்பிருந்த *M* மற்றும் *N* ஆகிய உறுதிப்பாடுகள் இப்போது *M* உறுதிப்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன).<br>- சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகள் திருத்தங்களுடன் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |
| மிக அண்மைய முன்னைய திருத்தத்தின் விபரங்கள்: | *03.04.2023* | - தமிழ் மொழிபெயர்ப்பு இற்றைப்படுத்தப்பட்டது. |
| மதிப்பாய்வு :<br>*Aitken Spence* குழுமத்தின் பேண்தகுதன்மையின் தலைவர்<br>மற்றும் *Aitken Spence* பேண்தகுதன்மை பேரவையின் தலைவர் என்ற வகையில்<br>கலாநிதி ரொஹான் பெர்னாண்டோ<br>பணிப்பாளர் - *Aitken Spence PLC* | | |